[*1994 நவம்பர் 8*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *58*, திரு. என். ஆர். இராஜேந்திரன், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

58—

காட்டுமன்னார்கோயில் தொகுதியில் நரிக்குறவர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கும் திட்டம்.

***21820—திரு. என். ஆர். ராஜேந்திரன்:**

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார் கோயில் தொகுதியில் வாழும் நரிக்குறவர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

காட்டுமன்னார்கோயில் சட்டப் பேரவைத் தொகுதி காந்தி நகர் பகுதியில் வாழும் *50* நரிக்குறவர்கள் ஆற்றுப் புறம்போக்கில் குடியிருப்பதால், இலவச வீட்டுமனை இதுவரை ஒதுக்கீடு செய்யப்படவில்லை. வீட்டுமனை ஒதுக்கீடு செய்யப்பட்டதும், நிதிநிலைமைக்கேற்ப வீடுகள் கட்டிக் கொடுப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது இதயதெய்வம் ஆட்சியில்தான் நரிக்குறவர்கள் வளர்ச்சிக்காக பல்வேறு நலத் திட்டங்களைச் செய்து வருகிறோம். அங்கே வாழ்கின்ற நரிக்குறவர்கள் மிகவும் சிறிய வீடுகளில் வாழ்கிறார்கள். மழைக் காலங்களில் அடிக்கடி சேதம் ஏற்பட்டு, அவர்களுக்கு அரசு நஷ்டஈடு கொடுத்துக் கொண்டிருக்கிறது. இது வருஷந்தோறும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்த நிலைமையை மாற்றி, அவர்களுக்கு விரைவாக வீட்டுமனை வழங்கி, வீடுகள் கட்டித் தர அரசு அவசரமாகப் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீட்டு மனைகளை அவர்களுக்குக் கொடுப்பதற்காக

1994 நவம்பர் 8]

'பிரைவேட் நெகோசியேஷன்ஸ் மெதட்' என்று சொல்லக்கூடிய தனியாரோடு பேசித் தீர்த்தல் முறையைப் பின்பற்ற நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே நரிக்குறவர்கள் வாழ்கின்ற பகுதியிலே தனியார் நிலம் கொடுக்க முன்வந்தால்கூட அரசே அந்த நிலத்திற்குத் தேவையான பணத்தைக் கொடுத்து, அவர்களுக்கு அந்த நிலத்தைப் பட்டா செய்து கொடுக்கத் தயாராக இருக்கிறது. அந்த அடிப்படையிலே நரிக்குறவர்கள் வாழும் பகுதியில் உள்ள தனியார்கள் யாராவது நிலம் கொடுக்க முன்வந்தால், அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்களிடம் சொன்னால், அந்த நிலத்தை வாங்கி பட்டா போட்டு தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். . .

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: நரிக் குறவர்கள் எல்லோருக்குமே வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே முதல் கட்டமாக நில மனைப் பட்டா உள்ள நரிக் குறவர்களுக்கு ஏறக்குறைய 1533 வீடுகளைக் கட்டுவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி). இந்த ஆண்டு 3 கோடி ரூபாய்ச் செலவிட உத்தரவிட்டு இருக்கிறார்கள். செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் 83 வீடுகளும், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் 102 வீடுகளும், தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டத்தில் 313 வீடுகளும், தஞ்சாவூர் மற்றும் நாகை-காயிதே மில்லத் மாவட்டங்களில் 209 வீடுகளும், திருச்சி மாவட்டத்தில் 431 வீடுகளும், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் 31 வீடுகளும், சேலம் மாவட்டத்தில் 70 வீடுகளும், பெரியார் மாவட்டத்தில் 130 வீடுகளும், மதுரை மாவட்டத்தில் 66 வீடுகளும், வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் 98 வீடுகளும் கட்டுவதற்கு உத்தரவிட்டு இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கேட்பதற்கு முன்பே நரிக்குறவர்களுக்கு வீடுகளையும் மனைகளையும் வழங்குவதற்காக நல்ல திட்டங்களை வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் இந்த மாமன்றத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதாவது, பாரதி

"சேறுபட்ட நாற்றமும்-தூறுஞ் சேர்
சிறியவீடு கட்டுவாய் போ போ போ."

என்று சொன்னார். அந்தப் பொருள் உணராத நரிக்குறவர்களுக்காக பாரதியினுடைய கனவை நனவாக்கிய இதய தெய்வம் அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 59, திருமதி ரமணி நல்லதம்பி, இருக்கையில் இல்லை.

வினா எண் 60, திரு. சிங்கை கோவிந்தராசு, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

60—

கிராம மக்களுக்கு கதர்த் தொழில் மூலம் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு அளித்தல்.

***36582—திரு. சிங்கை கோவிந்தராசு:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம மக்களுக்கு கதர்த் தொழில் மூலம் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கிராம மக்களுக்கு கதர்த் தொழில் மூலம் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய வளர்ச்சியிலே, அதுவும் தொழில்